# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 31/ந/2026, நாள் 13.05.2026</u>

M. தீபா,
கீழ்வேளூர், நாகப்பட்டினம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாகப்பட்டினம் நகராட்சி,நாகப்பட்டினம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா, திருக்கண்ணங்குடி, மேல தெரு, கதவு எண். 277 என்கிற முகவரியில் வசிக்கும் M. தீபா என்பவரது 27.01.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.01.2026 அன்று பெறப்பட்டு, 31/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா, திருக்கண்ணங்குடி, மேல தெரு, கதவு எண். 277 என்கிற முகவரியில் வசிக்கும் M. தீபா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள 27.01.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். முன்பு நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரம், C/48 என்ற முகவரியில் வசித்து வந்தேன். நான் நாகப்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டும் என்று விரும்பி 27/06/2025 அன்று இணைய வழி வாயிலாக விண்ணப்பித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து 30/06/2025 அன்று நகராட்சி பொறியியல் துறையில் ஒப்பந்ததாரராக பதிவுசெய்ய அவர்கள் கேட்ட ஆவணங்கள் அனைத்தையும், இணையவழியில் (Online) பதிவேற்றாத சில ஆவணங்களையும் சேர்த்து அச்சுப்பிரதியாக (Hard Copy) ஒரு கோப்பிலிட்டு (File) அவர்களிடம் கொடுத்துவிட்டேன். திரு. பூவராகவன் அவர்கள் கேட்ட டிமாண்ட் செய்ததை நான் கொடுக்க மறுத்து விட்டேன்.

E1 திரு. பூவராகவன் அவர்கள் கேட்டதை நான் கொடுக்க மறுத்து விட்டதால் தனது விண்ணப்பத்தினை இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கும், அடிப்படை உரிமைக்கும், தனிமனித உரிமைக்கும், சமூக நீதிக்கும், இயற்கை நீதிக்கும் எதிராக சுமார் 160 நாட்கள் எந்த செயலாக்கமும், நடவடிக்கையும் (process and Action) செய்யாமல் எனது விண்ணப்பித்தினை கிடப்பில் போட்டு விட்டார்.

மிகச்சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அவபெயரை ஏற்படுத்த வேண்டும். கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மெத்தனமாக அலட்சியமாக ஆணவப் போக்குடன் திரு. பூவராகவன் அவர்கள் செயல்பட்டுள்ளார். திரு. பூவராகவன் அவர்களுக்கு சரியான உத்தரவுகள் இட்டு அவரது செயல்பாடுகளை கண்காணிக்க வேண்டிய, முடுக்கி விட வேண்டிய பொறுப்பில் இருக்கும் நகராட்சி பொறியாளர் திரு.கல்யாண சுந்தரம் அவர்களும் அவரது நகராட்சி பொறியாளர் என்ற பணிக்கான கடமையை அலுவலை சரியாக செய்யாமல் திரு. பூவராகவன் அவர்கள் செய்யும் அனைத்து தவறுகளுக்கும் விதிமுறை மீறிய செயல்பாடுகளுக்கும் உடந்தையாக இருந்து, சேர்ந்தே தவறிழைத்திருக்கிறார்.

நகராட்சி பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் E1 என்று அழைக்கப்படும் திரு. பூவராகவன் அவர்களும், நகராட்சி பொறியாளர் திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் ''முதலில் வரும் மனுவிற்கு முதலில் தீர்வு'' ''முதலில் வருபவருக்கு முதலில் சேவை'' என்ற உலகம் முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டிலும் சிறப்பாக நடைபெற்றுவரும் அலுவலக விதிமுறைகளை, நெறிமுறைகளை அலட்சியப்படுத்தி நிராகரித்து ஆணவத்துடன் அதிகார துஷ்பிரயோகம் செய்து எனது விண்ணப்பத்தை நிராகரித்து விட்டு எனக்குப் பிறகு ஒப்பந்தாரராக விண்ணப்பித்த விண்ணப்பங்களை செயலாக்கம் செய்து ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பது அரசு ஊழியரின் கடமை மற்றும் கட்டுப்பாட்டிற்கு எதிரான செயலாகும்.

மேலும் இணைய வழி விண்ணப்பித்தல் என்பது காலதாமதத்தையும், ஊழலையும் ஒழிக்க வேண்டும் என்று என்பதற்காகவும், வெளிப்படையான, நேர்மையான, விரைவான சேவைக்காகவும் உருவாக்கப்பட்டது ஆகும். ஆனால் E1 என்று அழைக்கப்படும் பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் திரு. பூவராகவன் அவர்களும் நகராட்சி பொறியாளர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் எனது இணைய வழி விண்ணப்பத்தை சுமார் 160 நாட்கள் எந்த செயலாக்கமும் செய்யாமல் கிடப்பில் போட்டிருப்பது மிகப்பெரிய குற்றமாகும்.

நான் எனது விண்ணப்பித்தனை செயலாக்கம் செய்ய வேண்டி நாகப்பட்டினம் நகராட்சியின் பொறியியல் துறைக்கு கால் கடுக்க மனம் நோக எண்ணற்ற தடவைகள் நடையாய் நடந்து மனவேதனையும் மனஉளைச்சலும் அடைந்தேன். தாங்க முடியாத துயரத்தை, அவமானத்தை, நிராகரிப்பை, அதிகார துஷ்பிரயோகத்தை அனுபவித்தேன். இதனால், நான் மனம் நொந்து போய் 01/12/2025 அன்று புகார் மனு அனுப்பினேன். நான் புகார் அனுப்பிய பிறகு எனது விண்ணப்பம் 09/12/2025 அன்று நகராட்சி பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் திரு. பூவராகவன் அவர்களிடம் இருந்து நகராட்சி மேற்பார்வையாளரிடமும் (overseer) 13/12/2025 அன்று நகராட்சி மேற்பார்வையாளரிடம் இருந்து நகராட்சி உதவி பொறியாளர் அவர்களுக்கும், 15/12/2025 அன்று நகராட்சி உதவி பொறியாளர் (Assistant Engineer) அவர்களிடமிருந்து எனது விண்ணப்பத்தின் அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட்டது என்ற கருத்துரையுடன் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது (பார்வர்ட் Forward செய்யப்பட்டது).

15/12/2025 அன்று நகராட்சி பொறியாளரின் கைக்கு, அல்லது IDக்கு அல்லது அவரது மேஜைக்கு அல்லது அவரது கணினிக்கு வந்த எனது விண்ணப்பம் 08/01/2026 வரை 25 நாட்கள் மீண்டும் பழையபடி கிடப்பில் போடப்பட்டு இருந்தது. அதன் பிறகு ஏதாவது காரணங்கள், குறைகள் கூறி எனது மனுவினை கிடப்பில் போட வேண்டும் என்னை நாகப்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய விடக்கூடாது என்ற ஒரே காரணத்தில் 08/01/2026 அன்று ஏற்கனவே சரிபார்க்கப்பட்ட ஆவணங்களை மீண்டும் வரிசை மாற்றி அனுப்ப வேண்டும் என்று சப்பையான ஒன்றுக்கும் உதவாத ஒரு காரணத்தை கூறி திருப்பி அனுப்பி விட்டார் நகராட்சி பொறியாளர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள். நானும் உடனே அந்த ஆவணங்களை மீண்டும் வரிசை மாற்றி அனுப்பி வைத்து விட்டேன்.

நான் உடனடியாக 08/01/2026 அன்று நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்புரைபடி உடனடியாக ஆவணங்களை வரிசை மாற்றி அனுப்பிவிட்டேன். இதனால் அதிர்ந்து போன நகராட்சி பொறியாளர் என்ன செய்வதென்றே தெரியாமல் ஏற்கனவே அச்சுப்பிரதியாக (Hard copy) நான் கொடுத்திருக்கும் ஆவணங்களில் ஒன்றை மீண்டும் இணைய வழி வாயிலாக பதிவேற்றம் செய்யுங்கள் என்று கூறி எனது விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும், காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக மீண்டும் திருப்பி அனுப்பி விட்டார்.

உண்மையிலேயே எனது விண்ணப்பத்தில் ஏதேனும் ஆவணங்கள் தேவைப்பட்டால் அவருக்கு தேவையான ஆவணங்கள் நான் அச்சு பிரிதியாக கொடுத்த கோப்பில் இல்லாவிட்டால் நான் விண்ணப்பம் செய்திருந்த ஒரு மாத காலத்திற்குள்ளாகவோ அல்லது அவர் முதலில் திருப்பி அனுப்பிய 08/01/2026 அன்றே ஒரே தடவையில் அவருக்கு தேவையான ஆவணங்களை என்னிடம் இருந்து பெற்று இருக்கலாம். ஆனால் நகராட்சி பொறியாளர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் நகராட்சி பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் திரு. பூவராகவன் அவர்களுக்கும் அவர்கள் கேட்டதை நான் கொடுக்காததால் எனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு என்னை நகராட்சி ஒப்பந்ததாரராக பதிவு செய்ய அனுமதித்துவிடக் கூடாது என்ற எண்ணமே முழுக்க முழுக்க இருக்கிறது என்பது அவர்களுடைய காலதாமதமான மெத்தனமான அலட்சியமான செயல்படுகளின் மூலம் தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

எனவே உயர் அதிகாரியான தாங்கள் எனது விண்ணப்பித்தினை உடனடியாக பரிசீலித்து என்னை ஒப்பந்ததாரராக அங்கீரித்து பதிவு செய்ய உத்தரவிட வேண்டுகிறேன். மேலும் எனது விண்ணப்பத்தினை அனைத்து விதிமுறைகளுக்கும் எதிராக செயல்பட்டு காலதாமதபடுத்தி, சேவை குறைபாடுகளை ஏற்படுத்தி, என்னை அலைகழித்து மன வேதனைப்படுத்தி, மன உளைச்சலை ஏற்படுத்திய நகராட்சி பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் திரு. பூவராகவன் அவர்கள் மீதும் நகராட்சி பொறியாளர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும்படியும், நகராட்சி பொறியியல் பிரிவு இளநிலை உதவியாளர் E1 திரு. பூவராகவன், நகராட்சி பொறியாளர் திரு. கல்யாணசுந்தரம் ஆகியோரால் நான் அடைந்த வேதனைக்கும், மன உளைச்சலுக்கும் தக்க பரிகாரம் வேண்டுகிறேன்.".

**2.** மனுதாரரின் முறையீட்டு மனு மீதான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **12.02.2026** நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

**3.** எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.**445/2026/சி1,** நாள் **03.03.2026–ல்** மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"நாகப்பட்டினம் நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு திருமதி. எம். தீபா, த/பெ. மணி என்பவரின் விண்ணப்பமானது இ சேவையின் மூலம் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணங்களை ஆய்வுகள் மேற்கொள்வதற்குரிய அலுவலர்களான உதவி செயற் பொறியாளர் இந்நகராட்சியில் **24.10.2025** அன்று பணியிட மாறுதல் காரணமாக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். மேலும் இந்நகராட்சியில் உதவி பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள் புதியதாக **07.08.2025** முதல் பணி நியமனம் செய்யப்பட்டும், பின்னர் ஒருமாத காலத்திற்கு பயிற்சி முடிக்கப்பட்டு **1.10.2025** முதல் அனைவரும் பணிக்கு வரப்பெற்று தொடர் அன்றாட பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடு காலங்களில் போர்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வந்தார்கள் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி திருமதி. எம். தீபா, த/பெ. மணி என்பவரின் விண்ணப்பமானது இ சேவையின் மூலம் பெறப்பட்டதனை ஒவ்வொரு பணியாளர்களின் குறியீட்டு எண்ணில் பகிர்வு செய்து கணினி மூலம் படிப்படியாக ஆய்வுகள் மேற்கொண்டு தேவைப்படும் ஆவணங்களின் விவரங்களை தனியரிடமிருந்து பெறப்பட்டதன் அடிப்படையிலேயே ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது. திருமதி. எம். தீபா என்பவரின் மனு மேற்படி பரிசீலிக்கப்பட்டு பதிவு மற்றும் இதர கட்டணங்கள் செலுத்த அறிவுறுத்தப்பட்டதனை தொடர்ந்து, தனியரால் **24.02.2026** அன்று முழுமையாக கட்டணங்கள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி முடிக்கப்பட்டவுடன் தனியரை இந்நகராட்சியின் ஒப்பந்ததாரராக நிலை–Vல் பதிவு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை ஆகும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''. என தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.**445/2026/சி1,** நாள் **07.04.2026–ல்** மனுதாரரின் முறையீட்டு மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"M. Deepa, Application No.TN1692025062601069 Date: 26.06.2025 (Time: 18:45)

திருவாளர் ம. தீபா என்ற விண்ணப்பதாரரிடமிருந்து **27.06.2025** அன்று ஒப்பந்ததாரராக பதிவு செய்ய விண்ணப்பமானது இணையதளம் வழியாக சமர்பிக்கப்பட்டது.

மேற்படி விண்ணப்பமானது காலதாமதம் ஏற்பட்டதாக விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளார். புகார் தொடர்பான கேள்விகளுக்கு உரிய துறை ரீதியான பதில்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

- இந்நகராட்சி அலுவலகத்தில் போதுமான அரசு ஊழியர்கள் இல்லாத காரணத்தினாலும் பொறுப்பு நகராட்சி பொறியாளர் மட்டுமே இருந்தமையால் இணையதள வழியாக வரும் விண்ணப்பங்களை பார்வையிட்டு தீர்வு காண இயலாத காரணத்தினால் விண்ணப்பங்கள் தேக்க நிலை இருந்தது.

- மேற்படி நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நகராட்சி பொறியியல் பிரிவுக்கு புதிய அலுவலர்கள் **08.08.2025**ல் நேரடி நியமனம் செய்யப்பட்டு பின்னர் **30.08.2025** முதல் **30.09.2025** வரை பயிற்சிக்கு சென்றனர்.

- மேலும், வடக்கு கிழக்கு பருவமழை **12.09.2025** முதல் தொடங்கி செப்டம்பர் இறுதி வரை தீவிரமடைந்ததாலும் **26.01.2026** அன்று வரை மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி அலுவலர்கள் அனைவரையும் போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணிக்கப்பட்டது.

- மேலும், பொறியியல் பிரிவு பணிகளும் மற்றும் வடக்கு கிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் இந்நகராட்சிக்கு **12.10.2025** அன்று நகராட்சி பொறியாளர் இந்நகராட்சிக்கு நியமிக்கப்பட்டு மற்றும் கூடுதல் பொறுப்பாக வேதாரண்யம் நகராட்சி பணிகளையும் சேர்த்து பணிகளை மேற்கொள்ள பணிக்கப்பட்டார்.

- மேற்படி, விண்ணப்பதாரரின் விண்ணப்பமானது **09.12.2025** அன்று பொறியியல் பிரிவு உதவியாளர் **(இ1)** அவர்களால் சரிபார்க்கப்பட்டு எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு விண்ணப்பமானது இணையதளத்தில் அனுப்பப்பட்டது.

- மேற்படி, விண்ணப்பத்தாரரின் விண்ணப்பமானது **13.12.2025** அன்று பொறியியல் பிரிவு நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் நகராட்சி உதவி பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பமானது இணையதளத்தில் அனுப்பப்பட்டது.

- மேற்படி, விண்ணப்பதாரரின் விண்ணப்பமானது **15.12.2025** அன்று நகராட்சி உதவி பொறியாளர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பமானது இணையதளத்தில் அனுப்பப்பட்டது.

- மேற்படி, வடகிழக்கு பருவமழையானது **26.01.2026** அன்று வரை நீடித்ததால் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த காரணத்தினால் விண்ணப்பமானது **15.12.2025** பிறகே விண்ணப்பமானது நகராட்சி பொறியாளர் (ID) அவர்களுக்கு இணையதளத்தில் அனுப்பப்பட்டது. மேலும், **08.01.2026** அன்று இணையதளத்தில் விண்ணப்பம் பார்வையிடப்பட்டு ஆவணங்கள் சரிதன்மையில்லாத காரணத்தினாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் மாற்றி சமர்ப்பிக்க விண்ணப்பதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

- 1. Sl.No.7 Account Audit statement –க்கு பதிலாக GST Certificate மாற்றி இணைக்கப்பட்டிருந்தது.

- 2. தீபா என்ற விண்ணப்பதாரரின் Sl.No.11 Technical details பதிவேற்றம் செய்வதற்கு பதிலாக வினோத் என்ற மூன்றாம் நபரின் Technical details தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது.

- 3. Sl.No.12 Bank Statement–க்கு பதிலாக Aadhaar Card தவறாக பதிவெற்றம் செய்யப்பட்டு இருந்தது.

- 4. Sl.No.13 signed of Photo–க்கு பதிலாக Photo மட்டும் பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தது signed copy இணைக்கப்படவில்லை.

- 5. Sl.No.15 Co-operative Society not applicable என்ற Certificate இணைப்பதற்கு பதிலாக Non block list தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தது.

- மேற்படி Provide list of construction machineries கூடுதலாக இணைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

- மேற்படி **08.01.2026** அன்று விண்ணப்பதாரரிடமிருந்து அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்ததை **12.01.2026** அன்று பார்வையிடப்பட்டது.

- மேற்படி Provide list of construction machineries கூடுதலாக இணைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டதை விண்ணப்பதாரர் இணைக்காத காரணத்தினால் அதற்கு பதிலாக கடிதமாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

- மேற்படி காரணங்களினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பமானது 27.01.2026 அன்று நகராட்சி பொறியாளரிடமிருந்து ஆணையர் அவர்களுக்கு விண்ணப்பமானது இணையதளத்தில் அனுப்பப்பட்டது.

மேற்படி விண்ணப்பதாரரால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிதன்மை ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டு மேலும், பதிவு கட்டணம், தொழில்வரி கட்டணம், கொடிநாள் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்த அறிவுறுத்தப்பட்டது.

பதிவு கட்டணம், கொடிநாள் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை 05.02.2026 அன்றும் மற்றும் 24.02.2026ல் தொழில்வரி கட்டணத்தை செலுத்தினார்கள்.

மேற்படி ஆணையர் அவர்களால் 27.02.2026 அன்று விண்ணப்பதாரருக்கு நாகப்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரர் நிலை 5ல் பதிவு செய்து 27.02.2026 சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சியானது நாகப்பட்டினம் மாவட்ட தலைமை தேர்வு நிலை நகராட்சியாக உள்ளதால் பொறியியல் பிரிவில் உதவி செயற்பொறியாளர் பணியிடமானது 01.08.2024 முதல் பணி இடமானது காலியாக உள்ளதனை கருத்தில் கொண்டு அருகாமையில் உள்ள வேதாரண்யம் நகராட்சியில் உள்ள திரு. ஆர். தாண்டவமூர்த்தி உதவி செயற்பொறியாளர் (09.08.2024 முதல் 30.06.2025 வரை (அன்று ஓய்வு) மற்றும் திருவாருர் நகராட்சியிலிருந்து திரு. ஆர். திருமலைவாசன், உதவி செயற்பொறியாளர் (30.07.2025 முதல் 23.10.2025) இந்நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் அன்றாட பணிகள் பாதிக்காத வகையில் கூடுதல் பணியாக பார்க்கப்பட்டு வந்தது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இந்நகராட்சிக்கு பணியிடமாறுதலில் நிரந்தரமாக திரு. ஆர். கல்யாணசுந்தரம், உதவி செயற்பொறியாளர் 24.10.2025 முதல் இன்றுவரை பணிபுரிந்து வருகிறார் என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திருவாரூர் நகராட்சியின் உதவி செயற்பொறியாளரது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் (டயாலிசிஸ்) பணிகளில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் முதலமைச்சரின் தனிபிரிவு மனுக்கள், துயர்துடைப்பு மனுக்கள் மற்றும் உங்களுடன் ஸ்டாலின் (15.07.2025 முதல் 07.10.2025 வரை) நடைபெற்ற 15 முகாம்களில் வரபெற்ற மனுக்களுக்கு உடனுக்குடன் உரிய பதிலறிக்கை சமர்ப்பிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு உதவியாளர் (இ1 எழுத்தர்) மற்றும் இளநிலை உதவியாளர் மட்டுமே பணிபுரிந்து வந்த நிலையில் 24.11.2025 அன்று இளநிலை உதவியாளருக்கு எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் உடல்நிலை பாதிக்கப்பட்டு இன்றுவரை விடுப்பில் உள்ளார் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் கந்தூரி திருவிழா 2025னை முன்னிட்டு (21.11.2025 முதல் 04.12.2025 வரை) வரப்பெறும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்து செல்வதற்கு ஏதுவாக முன்னேற்பாடு பணிகள், வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் (16.11.2025 முதல் 13.01.2026 வரை) அனைத்தும் பணியினையும் கூடுதலாக உதவியாளர் (இ1 எழுத்தர்) மூலமே நிர்வாகப் பணிகள் பாதிக்கப்படாத வகையில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, உதவியாளர் பதவி உயர்வின் காரணமாக பணியிடமாறுதலின் கீழக்கரை நகராட்சிக்கு சென்றுவிட்டார் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட புகார்கள் யாவும் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே பணி சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதில் தனியர் மீது எவ்வித காழ்புணர்ச்சியும் இல்லை என்ற விவரமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ஆகையால் மேற்காணும் புகார் மனுவில் இருந்து உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவியாளரை விடுவித்திட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ". என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 08.04.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சிப் பொறியாளர் ஆகியோர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

“2024ம் ஆண்டு வரை நாகப்பட்டினம் நகராட்சியில் பொறுப்பு பொறியாளர்கள்தான் பணிபுரிந்து வந்துள்ளனர். நகராட்சியில் உதவிபொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர் புதியதாக 07.08.2025 முதல் பணி நியமனம் செய்யப்பட்டு, 1 மாத காலத்திற்கு பயிற்சி முடிக்கப்பட்டு 01.10.2025 முதல் தொடர்ந்து அன்றாட பணிகளை போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருகிறார். தற்போதைய நகராட்சி பொறியாளர் 24.10.2025 அன்று பொறுப்பேற்றுள்ளார்.

மனுதாரரின் விண்ணப்பம் ஒவ்வொரு பணியாளர்களின் குறியீட்டு எண்ணில் பகிர்வு செய்யப்பட்டு கணினி மூலம் படிப்படியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தேவைப்படும் ஆவணங்களை தனியரிடமிருந்து பெறப்பட்டதன் அடிப்படையில் ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு 24.02.2026 அன்று நாகப்பட்டினம் நகராட்சியின் ஒப்பந்ததாரர் நிலை–Vல் பதிவு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.”.

8. மனுதாரரின் புகார்மனு, எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

இணையதள சேவை என்பது காலதாமதம் தவிர்த்தல், ஊழல் ஒழித்தல், வெளிப்படையான, நேர்மையான விரைவான சேவை அளித்தல் போன்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு நாகப்பட்டினம் நகராட்சி ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் மனுதாரரால் 27/06/2025 அன்று இணையதளம் மூலம் சமர்ப்பித்துள்ளார் என்பதும், ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கான ஆவணங்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், பதிவேற்றம் செய்யப்படாத ஆவணங்களுடன் இதர ஆவணங்களையும் இணைத்து கோப்பிலிட்டு நகராட்சிக்கு அளித்துள்ளார் என்பதும், 160 நாட்களாகியும் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், மனுதாரரின் விண்ணப்பத்திற்கு பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், 01/12/2025 நாளிட்ட மனுதாரரின் புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளது என்பதும், நகராட்சி பொறியாளருக்கு அனுப்பட்ட விண்ணப்பம், மேலும் 25 நாட்கள் (08/01/2026 வரை) நடவடிக்கை எடுக்காமல் இருந்தது என்பதும், விண்ணப்பம் மீதான நடவடிக்கையை காலதாமதப்படுத்தி, அலைகழிக்கப்பட்டு வருவதால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறியவருகிறது.

நாகப்பட்டினம் நகராட்சி ஒப்பந்ததாரராக பதிவு செய்யவதற்கான மனுதாரரின் விண்ணப்பம் (Application No.TN1692025062601069, Date: 26.06.2025) இணைய தளம் வழி பெறப்பட்டுள்ளது என்பதும், நகராட்சியில் பொறுப்பு நகராட்சி பொறியாளர் மட்டுமே இருந்தமையால் இணையதள வழி பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது தீர்வு காண்பதில் தேக்க நிலை இருந்தது என்பதும், நகராட்சி நிர்வாக இயக்குநரால் 07.08.2025 முதல் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவி பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள் அலுவலர்கள் ஒரு மாதம் (30.08.2025 முதல் 30.09.2025 வரை) பயிற்சிக்கு சென்றுள்ளனர் என்பதும், பயிற்சியின் போது அன்றாட பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடு காலங்களில் போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதும், மாவட்ட ஆட்சியரின் அறிவுரைபடி வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் 12.09.2025 முதல் செப்டம்பர் இறுதி வரை அலுவலர்கள் அனைவரையும் போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணிக்கப்பட்டுள்ளனர் என்பதும், மேற்படி பணிகளுடன் கூடுதல் பொறுப்பாக வேதாரண்யம் நகராட்சி பணிகளையும் மேற்கொள்ள நகராட்சி பொறியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மேலும், இ–சேவை மூலம் பெறப்படும் விண்ணப்பம் மீது ஒவ்வொரு பணியாளர்களின் குறியீட்டு எண்ணில் பகிர்வு செய்யப்பட்டு, கணினி மூலம் படிப்படியாக ஆய்வுகள் மேற்கொண்டு தேவைப்படும் ஆவணங்களின் விவரங்களை பெற்று அதன் அடிப்படையிலேயே ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் விண்ணப்பம் 09.12.2025 அன்று பொறியியல் பிரிவு உதவியாளராலும், 13.12.2025 அன்று பொறியியல் பிரிவு நகராட்சி பணி மேற்பார்வையாளராலும், 15.12.2025 அன்று நகராட்சி உதவி பொறியாளராலும்

சரிபார்க்கப்பட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை 26.01.2026 வரை நீடித்த காரணத்தினால் மனுதாரரின் விண்ணப்பம் 15.12.2025 பிறகு நகராட்சி பொறியாளரின் இணையதளம் ID-க்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், இணையதளம் வாயிலாக 08.01.2026 அன்று பார்வையிடப்பட்டதில் விண்ணப்பத்தில் காணும் குறைகளை நிவர்த்தி செய்து சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், நிவர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் சரிதன்மை சரிபார்க்கப்பட்டு, பதிவு கட்டணம், தொழில்வரி கட்டணம், கொடிநாள் கட்டணம் மறும் இதர கட்டணங்களை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும், பதிவு கட்டணம், கொடிநாள் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை 05.02.2026 அன்றும், தொழில்வரி கட்டணத்தை 24.02.2026 அன்றும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாகப்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரர் நிலை 5ஆக பதிவு செய்து 27.02.2026 அன்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் 27.06.2025ல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது எட்டு மாதங்கள் ஆன நிலையில் 27.02.2026 அன்று தீர்வு காணப்பட்டுள்ளதற்கு பல்வேறு நிர்வாக காரணங்களை நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இனிவருங்காலங்களில் இதுபோன்ற காலதாமத்தை தவிர்க்குமாறும், மனுதாரர்களின் மனுக்கள்/விண்ணப்பங்கள் மீது அரசு விதிமுறைகளை பின்பற்றி துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மே திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. M. தீபா, த/பெ. S. மணி,
277, மேலத் தெரு, திருக்கண்ணங்குடி,
திருவேளூர் தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம் – 611004.

2) நகராட்சி ஆணையர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/5/26
செயலாளர்.